பக்கங்கள் 17+6

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 21 செவ்வாய்க்கிழமை 06.08.2024 | அதிர்வு 05

## இந்திய மீனவர்கள் 19 பேர் விடுவிப்பு!

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்கள் 19 பேர் நிபந்தனைகளுடன் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### சுமந்திரன் தனி நபர் பிரேரணையாகச் சமர்ப்பித்த


# மாகாண சபைகள் தேர்தல் சட்டம் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றம்

## விவாதம், வாக்கெடுப்பின்றி இன்று நடந்தது

## மூன்றாம் வாசிப்பு விரைவில் சபைக்கு வரும்

மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடத்தி மாகாண சபைகளை மீள இயங்கப் பண்ணுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சமர்ப்பித்த தனிநபர் சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்பில் விவாதம் இன்றி - வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் செய்துள்ள பரிந்துரைகளைச் சட்டமூலத்தில் திருத்தங்களாகச் செய்வதற்காக அது நாடாளுமன்றத்தின் சட்டங்களுக்கான நிலையியற் குழுவுக்கு அனுப்பப்படுகின்றது. நிலையியற் குழுவின் திருத்தங்களோடு பெரும்பாலும் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் அது மீண்டும் நாடாளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 04









# வவுனியாவில் கிணற்றுக்குள் இருந்து இளம் ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்பு!

(கே.வசந்தன்)

வவுனியா, நெளுக்குளம், பாலாமைக்கல் பகுதியில் உள்ள தோட்டக் காணி கிணற்றுக்குள் இருந்து இளம் ஆசிரியர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.


வீதியால் சென்றவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய இன்று காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, வேப்பங்குளம் 60 ஏக்கர் பகுதியில் வசிக்கும் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியரான கிருஷ்ணன் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் மேற்படி ஆசிரியரின் 04

# திருகோணமலை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணுங்கள்!

## நாடாளுமன்றத்தில் குகதாசன் எம்.பி. வேண்டுகோள்



"திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், மீனவர்கள், நோயாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உரிய அமைச்சர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்." – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

சபாநாயகரே! திருகோணமலை மாவட்டத்தில் நிலவுகின்ற மிக முதன்மையான சிக்கல்களை இந்த உயரிய அவையின் கவனத்துக்குக் கொண்டுவந்து அவற்றுக்குத் தீர்வு காண விழைகின்றேன்.

1. திருக்கோணேஸ்வரம் வரலாற்று புகழ்மிக்க ஒரு புனிதத் தலம். இக்கோவிலுக்கு பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இவர்கள் இந்த இடத்தின் அழகைக் கண்டு களிக்க விரும்புகின்றனர். சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கடைகள் இதற்குத் தடையாக உள்ளன. மேலும் இக்கடைகளினால் கோவிலின் புனிதத் தன்மை கெடுவதோடு இங்கு சில சமூக விரோதச் செயல்பாடுகளும் இடம்பெறுகின்றன. எனவே, இக்கடைகளை வேறு ஒரு தகுந்த இடத்திற்கு மாற்ற வேண்டும் என 2019 ஆம் ஆண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது. எனினும் இம்முடிவு இது வரையிலும் செயற்படுத்தப்படவில்லை. இந்த முடிவை விரைந்து செயற்படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. இரண்டாவதாக நமது நாட்டின் குடியரசுத் தலைவரும் அரசும் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். எனினும் அரசின் ஓர் அங்கமான வனத் துறை திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறத்தாழ நாற்பதாயிரம் ஏக்கர் நிலைத்தையும் தொல்பொருள்துறை 2600 ஏக்கர் நிலைத்தையும் கையகப் படுத்தி வைத்துள்ளனர்.

இந்தக் காணிகள் 1985ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் பயிர் செய்த நிலங்கள் ஆகும். 1985ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் பயிர் செய்த நிலங்கள் விடுவிக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் கூறிய பொழுதும் அது நடைபெறவில்லை. இந்தக் காணிகளை விடுவிக்க அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

வனத்துறை கையகப்படுத்தி வைத்துள்ள பகுதிக்குள் 80 சிறு குளங்கள் உள்ளன. வனத்துறை இந்த நிலங்களை விடுவித்து இக்குளங்களை திருத்தி அமைப்பதன் மூலம் சில ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை நெற்செய்கையின் கீழ் கொண்டுவர முடியும். இவற்றின் மூலம் நாட்டின் நெல் உற்பத்தியை பெருக்குவதோடு உழவரது பொருண்மிய நிலையையும் மேம்படுத்தலாம்.

3. மூன்றாவதாக திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள கடற் தொழிலாளர் எதிர்கொள்ளும் சிக்கல்களை பற்றி தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். இந்த மாவட்டத்தில் ஏறத்தாழ 23,000 ஆயிரம் குடும்பங்கள் கடற்றொழிலை நம்பி வாழ்கின்றனர். எனினும் நவீன மீன்பிடி முறைமைகள் எதுவும் பின்பற்றப்படுவதில்லை. பன்னாள் மீன்பிடிப் படகு வைத்திருக்கும் மீனவர்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றனர். பெரும்பாலும் ஓர் எந்திரம் பூட்டிய படகில் சென்று மீன் பிடிப்பவர்களே மிகப் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்களால் அதிக மீன்களையும் பிடிக்க இயலவில்லை கடலுக்குச் செல்லும் பொழுது அடிக்கடி காணாமலும்போகின்றனர். அப்படி துன்பப்பட்டு போராடிப் பிடித்த மீன்களுக்கு சரியான விலையும் கிடைப்பதில்லை பெரும்பாலும் இடைத் தரகர்களே இலாபம் ஈட்டுகின்றனர்.

இதற்கான தீர்வாக ஏழை மீனவர்களுக்கு பன்னாள் மீன்பிடிப் படகு கொள்வனவு செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன் கொடுக்கும் திட்டங்கள் ஏற்படுத்தப் பட வேண்டும்.

மேலும் பன்னாள் மீன்பிடிப் படகுத் துறைகள் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள இலங்கைத் துறை முகத்துவாரம், சம்பூர் மற்றும் சல்லி ஆகிய மீன்பிடி கிராமங்களில் நிறுவப்பட வேண்டும். இதனால் மீன் பிடியையும் மீனவர் பொருண்மியத்தையும் கூட்ட இயலும் என்பதோடு கடலில் காணாமற் போவோரின் எண்ணிக்கையும் குறையும். அதுமட்டுமின்றி படகுகள் காணாமற் போகுமிடத்து அப்படகுகளை வானூர்திகள் மூலம் தேடும் நடவடிக்கைகளை அரசு செய்ய வேண்டும்.

திருக்கோணமலை மாவட்டக் கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் மற்றுமொரு சிக்கல் சுருக்குவலையில் மீன் பிடிப்பதாகும் . இதன் காரணமாக கடல் வளம் வரம்பை மீறிச் சுரண்டப்படுவதோடு 100 ஏழை மீனவர் பிடிக்கும் மீன்களை ஒரே ஒரு பெரும் முதலாளியின் சுருக்குவலை படகு பிடிக்கின்றது. சுருக்குவலை சிக்கலுக்குத் தீர்வு எட்டப்பட வேண்டுமாயின் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு அவற்றை முழுவதுமாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

4. நான்காவதாகத் திருக்கோணமலை மாவட்டத்தில்நிலவும் கல்விதொடர்பான சிக்கல்களை தங்கள் மேலான பார்வைக்கு கொண்டு வருகின்றேன். இம் மாவட்டத்தில் 166 தொடக்க கல்வி ஆசிரியர் பற்றாக்குறையும் 116 கணித ஆசிரியர் பற்றாக்குறையும் 53 ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் 60 அறிவியல் ஆசிரியர் பற்றாக்குறையும் 52 கணினி ஆசிரியர் பற்றாக்குறையும் 53 தமிழ் ஆசிரியர் பற்றாக்குறையும் ஆக மொத்தம் 500 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் மாணவர்களது கல்வி மிகவும் பாதிக்கப்படுகின்றது. எனவே ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு போதிய ஆசிரியரை மாவட்டதிற்கு ஒதுக்கி தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

( 04ஆம் பக்கம் பார்க்க )

# பாரிய மணல் அகழ்வை நிறுத்தாவிடின் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்போம்

## பூநகரி மக்கள் போராட்டக் குழு எச்சரிக்கை

கௌதாரிமுனை மற்றும் பரமன் கிராய் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பாரிய மணல் அகழ்வுக்கு வழங்கப் பட்டுள்ள அனுமதிகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு மக்களின் கிரா மங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த பூநகரி மக்கள் போராட்டக் குழு, இல்லாவிடில் எதிர்வரும் ஜனா திபதித் தேர்தலைப் புறக்கணிப்போம் எனவும் எச்சரிக்கை விடுத்தது.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது தொடர்பில் பூநகரி மக்கள் போராட்டக் குழுவினர் மேலும் தெரி விக்கையில்,

“கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் பகுதிகளை இலக்கு வைத்து மீண்டும் பாரிய மணல் கொள்ளை நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

மக்கள் போராட்ட அமைப்புக்களது போராட்டத்தையடுத்து கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டிருந்த மணல் அகழ்வு தற்போது கனியவளத் திணைக்கள அதி காரிகளது பங்கெடுப்புடன் பெருமெ டுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாள் தோறும் நூற்றுக்கணக்கிலான டிப்பர்கள், கனரக வாகனங்கள் மூலம் மணல் ஏற்றியவாறு வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

அதனால் கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் ஆகிய இரு கிராமங் களும் அடுத்துவரும் ஓரிரு வருடங்க–ளில் இல்லாது போய்விடும் என்று அஞ்சு கின்றோம்.

ஏற்கனவே போதிய போக்குவரத்து வீதி வசதிகளற்ற நிலையில் கைவிடப் பட்டுள்ள எமது மக்கள் தற்போது கனரக வாகனப் பயன்பாட்டால் முற்றாக பரமன் கிராய் மற்றும் கௌதாரிமுனை பகுதி களிலிருந்து வெளியிடங்களுக்கான போக்குவரத்து முடக்கத்துக்குள்ளாகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே கௌதாரிமுனை வீதியை வழிமறித்து போக்குவரத்துக்குத் தடை யேற்படுத்தியுள்ள மணலை அகற்றி போக்குவரத்தைச் சீர்செய்ய கனிய வளத்திணைக்களம் அனுமதிக்காமை யால் போக்குவரத்து துண்டிக்கப்பட் டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகின் றோம்.

கனியவளத் திணைக்களத்தின் யாழ். அலுவலகப் பணிப்பாளர் (அல்லது பதிவாளர்) மயூரன் என்பவர் தனது பெயர் பலகையற்ற வாகனத்தில் இரவு – பகலாக அப்பகுதிகளில் நின்று மணல் அகழ்வை முன்னெடுக்கும் அதிசயம் இங்கு மட்டுமே நடக்கின்றது.




ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் மணல்கொள்ளையைத் தலைமை தாங்கிய நபரே தற்போது வடக்குக்குப் பணிப்பாளராக அனுப்பட்டுள்ளதால் பரமன்கிராய் மற்றும் கௌதாரிமுனை கிராமங்கள் இல்லாதொழிந்து போகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

இலங்கை கனியவளத் திணைக்களத் தால் பூநகரியின் பொன்னாவெளி பகுதியில் முன்னெடுக்க அனுமதிக்கப் பட்ட முருகைக்கல் அகழ்வுக்கு எதிரான மக்கள் போராட்டம் அனைவரும் அறிந் ததே.

இந்நிலையில் தற்போது கௌதாரி முனை மற்றும் பரமன்கிராய் பகுதி களில் முன்னெடுக்கப்படும் பாரிய மணல் அகழ்வுக்கென வழங்கப்பட்டுள்ள அனு மதிகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு மக்களது கிராமங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தவறுமிடத்து பூநகரி – பொன்னா வெளியில் இதே கனியவளத் திணைக்கள பங்கெடுப்புடன் முன்னெடுக்கப்பட விருந்த பாரிய முருகைக்கல் அகழ்வு எவ்வாறு தடுக்கப்பட்டதோ அதேபோன்று மக்கள் வீதிகளில் களமிறங்கி பாரிய போராட்டத்தின் மூலம் அரச அலுவல கங்களை முடக்கிப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

அத்துடன்ஒட்டுமொத்தமக்கள்போராட் டக் குழு அழைப்பின் பேரில் எதிர்வரும் 9ஆம் திகதியினுள் வழங்கப்பட்ட பெமிட் அனுமதிகள் இரத்துச்செய்யப்படாவிட் டால் பின்வரும் விபரப்படியாக கிளி நொச்சி மாவட்டம் தழுவிய போராட்ட நடவ டிக்கைகளுக்கு எமது உறவுகளுக்குப் பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம்.

ஏற்கனவே பொன்னவெளியில் இணைந்து போராடிய உறவுகள் எம்முடன் இணைந்துகொள்ளவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

01. ஜனாதிபதித் தேர்தலை ஒட்டு மொத்த மக்களும் புறக்கணிப்போம்.

02. கௌதாரிமுனை மற்றும் பரமன் கிராய் பகுதிகளில் திட்டமிடப்பட்டுள்ள அதானி குழுமத்தின் காற்றாலை பணிகளை முடக்கப் போராட்டங்களை ஆரம்பிப்போம்.

03. மக்கள் பயணிக்க கௌதாரி முனை வீதியைத் திருத்தித் தர இயலாத வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மணல் எடுத்துச் செல்ல வீதியை அனுமதித்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

03. கனியவளத் திணைக்கள வடக்கு மாகாண பணிப்பாளர் மயூரன் உடனடி யாக இடமாற்றம் செய்யப்படாதவிடத்து மாவட்ட செயலகம் மற்றும் பூநகரி பிர தேச செயலக அலுவலக முற்றுகைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

அவரது யாழ்ப்பாணத்திலுள்ள ஆடம் பர பங்களா முன்பாகவும் முற்றுகைப் போராட்டத்தை முன்னெடுப்போம். குறித்த நபர் தற்போது கிழக்கில் கைதான மண்மாபியா குழுக்களது நண்ப ராகவுள்ளதுடன் தற்போது வடக்குக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

கௌதாரிமுனை மற்றும் பரமன் கிராய் மணல் வியாபாரத்தின் பங்காளி யாகவுள்ளதுடன் தானே தனது பணி யாளர்கள் சகிதம் மணல் முகவர்களை வைத்து வியாபாரத்தை முன்னெடுத் துள்ளார்.

கிழக்கில் நடந்தேறிய மணல் மோசடி களை ஆளுநர் நேரடியாக அறிந் துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதானி காற்றாலை மூலம் எமது பகுதிக்குப் பாலும் தேனும் ஓடப் போவதாக சொல்லிக்கொண்டு எமது கிராமங்களையே இல்லாதொழிக்கும் மண்மாபியாக்களின் பின்னணியி லுள்ள அரசியல் தரப்பினரையும் நாம் அறிந்துள்ளோம்.

அத்தகைய தரப்பினரை எமது போராட்டத்தின் மூலம் விரைவில் அம்பலப்படுத்துவோம் ன்பதையும் அறியத்தருகின்றோம்.” – என்றனர்.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ஊடாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்க் கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும் பூநகரி மக்கள் போராட்டக் குழு வினரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

# திருகோணமலை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும்...

( 02ஆம் பக்கத் தொடர்ச்சி )

இப்பொழுது உள்ள முறையில் ஆசிரியர் வளப் பங்கீடு சரியான முறையில் அமையவில்லை மாகாணங்களுக்கு ஆசிரியர் நியமிக்கும்போது பெரும்பாலான ஆசிரியர் திருக்கோணமலை மாவட்டத்திற்கு வருகின்றார்கள். வந்த சில காலங்களில் தத்தம் மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுகொண்டு சென்று விடுகின்றனர்.

இந்தச் சிக்கலைத் தீர்பதற்குக் கல்வியல் கல்லூரிக்கு அனுமதி வழங்கும்பொழுது பிரதேச செயலாளர் மட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்தால் இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம். உள்நாட்டு அமைச்சு கிராம அலுவலர்களை நியமிக்கும் பொழுது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு. அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ளவர்களையே நியமிக்கின்றார்கள். இதே முறையை கல்வி அமைச்சும் பின்பற்றினால் ஆசிரியர் பற்றாக்குறைச் சிக்கலுக்கு தீர்வு காணலாம்.

மேலும் கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. கல்வித் துறைக்கு 2023 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்டத்தில் 1.3மூ நிதி மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1.5 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் குறைந்து 5 வீதமாக உயர்த்தப்பட வேண்டும்.

மேற்கு நாடுகள் தமது வரவு செலவுத் திட்டத்தில் 5 வீதத்துக்கும் கூடுதலான தொகையை கல்விக்கு ஒதுக்குகின்றன என்பதையும் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

5. அடுத்ததாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் மத்திய அரசின் மாவட்ட மருத்துவமனையில் 54 மருத்துவர் பற்றாக்குறையும், 9 துறைசார் மருத்துவ நிபுணர், 7 செவிலியர் பற்றாக்குறையும், 3 மருந்தாளர் பற்றாக்குறையும், 39 சுகாதாரப் பணியாளர் பற்றாக் குறையும், 3 சாரதிகள் பற்றாக்குறையும் நிலவுகின்றது.

மேலும் மாகாண அரசின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் 40 துறைசார் மருத்துவ நிபுணர் பற்றாக்குறையும். 21 மருத்துவர் பற்றாக்குறையும். 27 செவிலியர் பற்றாக்குறையும், 22 மருந்தாளர் பற்றாக்குறையும், 6 மிகைஒலி ஊடுகதிர் தொழில்நுட்பவியலாளர் பற்றாக் குறையும், 100 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு உரிய அமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் ஒரு பகுதி கட்டப்பட்ட நிலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு உள்ளன. இப்பிரிவில் அதிகளவில் நோயாளிகள் அனுமதிக் கப்படுவதால், நோயாளிகளை நிர்வகிக்க போதிய இடவசதி இல்லாத நிலை உள்ளது. இக்கட்டடத்தை கட்டி முடிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

மேலும் திருக்கோணமலை மாவட்டத்தில் புற்றுநோய் சிகிச்சைக்கான பிரிவு ஒன்று இல்லை. இதனால் இம் மாவட்ட மக்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இவர்கள் வெளி மாவட்டங்களுக்கு சிகிச்சைக்காகச் செல்கின்றனர். இதன் விளைவாக இம்மக்கள் பணச் செலவு, போக்குவத்து, நேரம், மொழி, தங்குமிட வசதி முதலிய சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றைத் தீர்ப்பதற்கு புற்றுநோய் பிரிவு ஒன்றை இம்மாவட்ட மருத்துவ மனையில் நிறுவுமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

6. அடுத்ததாக திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் முன்னேற முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் விளையாட்டு அரங்கு இல்லாமல் இருப்பதே ஆகும். இம்மாவட்டத்தில் உள்ள முதன்மையான மிகச் சிறந்த பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிய மக்கேசன் விளையாட்டு அரங்கு நீண்ட காலமாக மறுசீரமைக்கப் படாமல் புதர் மண்டிபோய் உள்ளது. இதை மறு சீரமைப்பதன் மூலம் திருக்கோணமலையில் விளையாட்டு துறையில் சாதிக்க எண்ணும் பல நூற்றுக்கணக்கான இளையோர்கள் முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதோடு பன்னாட்டு விளையாட்டு போட்டிகளை இங்கே நடத்தமுடியும் இதன் வழியாக நாட்டிற்கு அந்நிய நாணய மாற்று வருவாயை கொண்டு வர முடியும்.

7. அடுத்ததாகத் துறைமுக அதிகார சபையானது, பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பதினொரு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 5572 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியுள்ளது. இதில் 1868 ஏக்கர் நிலத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வாழ்கின்றார்கள். துறைமுக அதிகார சபையின் கையகப்படுத்தல் காரணமாக மக்கள் தங்கள் நிலத்தில் எந்தவித செயற்பாடுகளையும் செய்ய இயலாமல் உள்ளது. ஆகவே, இவ் விடங்களை அங்கு வாழும் மக்களுக்கு கையளிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

8. அடுத்ததாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறத்தாழ 10,000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன இவர்கள் போதிய படிப்பறிவு, பட்டறிவு மற்றும் வினைத்திறன் அற்றவர்களாக காணப்படுகின்றனர். ஆகவே, இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை கொடுத்து கமத்தொழில், கைத் தொழில், கால்நடை வளர்ப்பு, சேவைத் துறை முதலியவற்றில் சுய தொழில் செய்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

9. திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பல பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகள் தெளிவாக இல்லை. இதனால் அதிகாரிகளும் பொது மக்களும் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றார்கள். இந்த எல்லைகளை தெளிவுபடுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சபாநாயகரே! நான் இதுவரையில் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், மீனவர்கள், நோயாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், பத்தர்கள், சுற்றுலாப் பயணிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை இந்த உயரிய அவையில் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். இவற்றைத் தீர்ப்பதற்கு உரிய அமைச்சர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வவுனியாவில்...**

சைக்கிள், பாதணி, குடை என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

**மாகாண சபைகள்...**

இன்று இரண்டாம் வாசிப்புக்காக அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டபோது, விமல் வீரவன்ஸ எம்.பி. மட்டும் அதற்குத் தம் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

ஜனாதிபதித்தேர்தலை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் அரசியல் நோக்கம் கொண்ட நடவடிக்கை இது என அவர் விசனம் தெரிவித்தார்.

---


**இந்திய மீனவர்கள்...**

யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த வேளை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களின் ஐந்து வழக்குகளின் விசாரணைகள் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5 வழக்குகளில் 31 மீனவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். இவற்றில் மூன்று விசைப்படகுகள் மற்றும் 22 மீனவர்களின் வழக்கு விசாரணைகளின்போது 19 மீனவர்கள் 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டணையுடன் விடுவிக்கப் பட்டனர்.

ஏனைய மூவரும் படகோட்டிகள் என்ற அடிப்படையில் தலா 40 இலட்சம் ரூபா அபதாரம் விதிக்கப்பட்டதோடு அபராதத் தொகை கட்டத் தவறினால் ஒரு வருட கடூழியச் சிறை தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேநேரம் எஞ்சிய இரு வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட 9 மீனவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மித மிஞ்சிய அதிகாரம்

அபரிமிதமான மக்கள் செல்வாக்கோடு அதிகாரத்துக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் என்ன நடந்ததோ அதுதான் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸினாவுக்கும் இப்போது நடந்திருக்கின்றது. அதிகாரத்தில் - ஆட்சியில் - இருந்தபோதே மக்கள் எழுச்சிக்கு முகம் கொடுக்க முடியாமல் அவரைப் போலவே இவரும் நாட்டை விட்டுத் தப்பி ஓட வேண்டியதாயிற்று.

இருவரும் பெரும் மக்கள் செல்வாக்கோடு - நாடாளுமன்ற மற்றும் நிறைவேற்ற அதிகார வலிமையோடு - அதிகாரத்தில் இருந்த சமயத்தில்தான் அவர்களுக்கு எதிரான மக்கள் எழுச்சி கட்டுமட்டுமில்லாமல் கிளர்ந்தது. இரண்டு இடங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் அது நடந்திருக்கின்றது.

கோட்டாபய அரசின் நிதி அமைச்சராகவும் வலிமையான அரசியல் பிரமுகராகவும் இருந்த அவரின் சகோதரர் பஸில் ராஜபக்ஷவிடம் அறகலய மக்கள் புரட்சி ஏற்படக் காரணம் என்ன எனப் பின்னர் கேட்கப்பட்டது.

கட்டுமட்டில்லாத அதிகாரம் ஊழலுக்கு வழிகாட்டுகின்றது. மக்களின் அளவுக்கு மீறிய ஆணை - செல்வாக்கு - எங்களைப் பிழையான திசைக்கு வழிப்படுத்தி விட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

வரம்பற்ற அதிகாரம் எதேச்சாதிகாரத்துக்கு வழி செய்கின்றது. பெரும் மக்கள் செல்வாக்கு அதிகாரத்தை வாரி குவிக்கும் போது மிகச் சிரத்தையாக - மிக எச்சரிக்கையாக - மிகக் கவனமாக - ஆட்சியை கொண்டு போக வேண்டும். அதில் தவறிழைத்தால் இப்படித்தான் ஆகும்.

வேலைவாய்ப்பு இட ஒதுக்கீடு சம்பந்தமான மாணவர் கிளர்ச்சியை பிரதமர் ஷேக் ஹஸினா ஒருவாறு கையாண்டு அடக்கி விட்டார் என்றுதான் பலரும் கருதினர். உயர் நீதிமன்றுடன் இணக்கமான சூழ்நிலையை அவர் ஏற்படுத்திக் கொண்டார். நாட்டில் பொருளாதாரத்தையும் நலிவடைய விடாமல் கட்டுக்குள்தான் அவர் வைத்திருந்தார். அப்படி இருந்தும், குறுகிய சில நாள்களில் மாணவர் எழுச்சி மக்கள் போராட்டமாக - புரட்சியாக - விஸ்வரூபம் எடுத்து, வெடித்து நாட்டில் இருந்து பிரதமரே ஓடித்தப்பும் நிலைமை வந்தது எங்ஙனம்? ஏன்?

ஒரே காரணம்தான் உண்டு. ஜனநாயகத்திற்கு எதிரான அடக்குமுறையின் விளைவுதான் ஆட்சியாளருக்கு இந்த இழிநிலை ஏற்படக் காரணம்.

ஜனநாயக நாட்டில் ஜனநாயக விழுமியங்கள் பேணப்பட வேண்டும். ஜனநாயக நடைமுறைகள் சாக்குப் போக்கு சொல்லப்படாமல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டும் துறைகள் நியாயமாக செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும். நீதித்துறையின் சுதந்திரம் - சுயாதீனம் - தனித்துவம் - ஒழுங்காக மதித்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நிறைவேற்ற அதிகாரம் எல்லை மீறி சர்வாதிகாரமாக நடந்து கொள்ளக் கூடாது.

இலங்கையிலும் அயல் தேசங்களிலும் இத்தகைய பட்டறிவுகள் - அனுபவங்கள் - தாராளமாகக் கிட்டியுள்ள போதிலும் அவற்றிலிருந்தும் இலங்கையின் ஆட்சியாளர்கள் சரியான பாடம் படித்துக் கொள்ளவில்லை என்பதுதான் நமது நாட்டின் துரதிஷ்டம்.

தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இப்போதைய பதவிக்காலம் இன்னும் ஒன்றரை மாதங்கள்தான்.

இந்த ஆட்சி காலத்தில் மக்களின் உள்ளூராட்சி தேர்தல் வாக்குரிமையை அவர் அடாத்தாகப் பறித்துத் தமது ஜனநாயக விரோதப் பண்பியல்பை வெளிப்படுத்தினார். உயர் நீதிமன்ற உத்தரவுகளைத் தூக்கிக் கடாசினார். நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் கருத்துக்களை தொடர்ந்து விளாசி வருகின்றார்.

பெரும் மக்கள் செல்வாக்குடன் வந்தவர்களின் ஜனநாயக விரோத போக்குகளை சகிக்க முடியாமல் அவர்களையே மக்கள் துரத்தி அடித்த நிலைமை தென்னாசிய நாடுகளில் சர்வசாதாரணமாகி வருகையில், இலங்கையில் அதிகாரத்துக்கு பின்கதவால் வந்த ரணில் விக்கிரமசிங்க அந்த நிலைமையை புரிந்து கொள்ளாமல் இருப்பது விநோதமானது. விபரீதமானது.




## மன்னார் வைத்தியசாலைச் சம்பவம்:

# விசாரணை குழுவின் விசாரணைகள் நிறைவு; அடையாளம் காணப்பட்டனர் தவறிழைத்தோர்!

### மத்திய சுகாதார அமைச்சின் விசாரணையின் பின் நடவடிக்கை!!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இளம் பட்டதாரி பெண் மரணம் தொடர்பான விசாரணை குழுவின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையில் தவறிழைத்தவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைக் குழு ஒன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

அவர்களது விசாரணைகள் முடிவடைந்தவுடன் தவறிழைத்தவர் களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவமானது கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மரணமடைந்த இளம் தாய் பட்டப்படிப்பை நிறைவு செய்த மரியராஜ் சிந்துஜா (வயது 27) ஆவார்.

இந்தப் பெண்ணின் மரணத்தின் போது சம்பவ தினம் விடுதியில் இருந்தவர்களின் அசமந்த போக்கே காரணம் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

மரணம் தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சால் சுயாதீன விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாயில் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. விசாரணைகளின் அடிப்படையில் சிலர் தவறிழைத்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக விசேட அறிக்கை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைக் குழு ஒன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைகள் முடிவடைந்தவுடன் தவறிழைத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

குறித்த பெண்ணின் மரணம் தொடர்பாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து எனது தொலைபேசிக்குப் பல்வேறு அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

இந்த அச்சுறுத்தல் குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.-என்றார்.

# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரம்!

(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றில் முதல் தடவையாக நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர திருவிழா நாளை (07) புதன்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா தலைமையில் ஆடிப்பூரத் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று ஆலய பரிவான சபை தலைவர் கலாநிதி கே.ஜெயசிறில் தெரிவித்தார்.

இதேவேளை நாளை மறுதினம் (8) வியாழக்கிழமை நாக சதுர்த்தி விசேட பூஜையும் அங்கு இடம் பெறவுள்ளது.





# 54 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு 34 வருடங்களாகியும் இன்னும் நீதி கிடைக்கவில்லை

## திராய்க்கேணி படுகொலை தினத்தில் ஜெயசிறில் உரை

(வி.ரி.சகாதேவராஜா)

திராய்க்கேணியில் 54 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு 34 வருடங்களாகியும் இன்னும் நீதி கிடைக்கவில்லை என்று திராய்க்கேணி படுகொலை தினத்தில் உரையாற்றிய தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கி.ஜெயசிறில் தெரிவித்தார்.

1990 ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 34 வது வருட நினைவேந்தல் நிகழ்வு, சம்பவம் இடம்பெற்ற திராய்க்கேணி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் இன்று நடைபெற்றது.





சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

ஆரம்பத்தில் படுகொலையின்போது வெட்டிக்கொலை செய்யப்பட்ட 54 பேர் நினைவாக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. மலர் அஞ்சலி செலுத்தி அக வணக்கம் செலுத்தப்பட்டது. ஆலயத்தில் விசேட பூஜையும் இடம்பெற்றது.

படுகொலை சம்பவத்தில் கணவர்மாரை இழந்து விதவைகளான 40 பேரில், நேரிலே கண்முன்னே சம்பவத்தைப் பார்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் கருத்துக்களை அழுதழுது கூறினார்கள்.





# சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குரு பூஜை நிகழ்வு

(வி.ரி.சகாதேவராஜா)


சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜையும், அன்னதானமும் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (11) சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள அப்பாரம்பரிய நிகழ்வுக்கு முன்னோடியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை (04) குரு பூஜை தொடர்பான சித்தர் பட்டய அறிவிப்பு இடம்பெற்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (09) சுவாமிகள் முத்து சப்புறத்தில் வீதி வலம் வருவார்.

சனிக்கிழமை (10) சித்தர் ஆலயத்தில் கோமாதா பூஜை, 210 சித்தர்களுக்கான வேள்வி, அன்னதானம் மற்றும் திருவிளக்கு பூஜை என்பன நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை (11) ஆயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் 73 ஆவது குரு பூஜையும் அன்னதானமும் நடைபெறவுள்ளன. 12 ஆம் திகதி இடும்பன் பூஜையுடன் குருபூஜை நிறைவடையும்.





# கிழக்கு மாகாண சதுரங்கத்தில் சாதித்த மாணவிகள் கௌரவிப்பு !

(நூருல் ஹுதா உமர், அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க போட்டிகள் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

இந்தப் போட்டிகளில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகள் 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் சாம்பியனாகினர். 17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் ரனரப் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாகாணமட்ட சதுரங்க போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை தேசிய மட்டப் போட்டிகளுக்கு ஊக்கப்படுத்திக் கௌரவப்படுத்தும் நோக்கில் மஹ்மூத் மகளிர் கல்லூரி சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வு கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் கல்முனை வலய கல்வி பணிமனையின் உடற்கல்வி பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளருமான எம்.எல்.எம். முதர்ரீஸ், விஷேட அதிதியாக கல்முனை வலய கல்வி பணிமனையின் உடற்கல்வி ஆசிரிய வளவாளர் ஏ. முகம்மது அன்சார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சதுரங்க வரலாற்று சாதனை படைத்த மஹ்மூத் மாணவிகள் கல்லூரி முன்றலில் பூமாலை அணிவிக்கப்பட்டு இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டனர். பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் பெற்றோர்கள் முன்னிலையில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.








# ஓய்வு நிலை சாதனையாளருக்கான பாராட்டு!

(பாறுக் ஷிஹான்)

நற்பிட்டிமுனை அல்-கரீம் பவுண்டேஷனின் பணிப்பாளர் சீ. எம். ஹலீம் தலைமையில் "ஓய்வு நிலை சாதனையாளர்கள் பாராட்டு நிகழ்வு" ஞாயிற்றுக்கிழமை (04) சவளக்கடை றோயல் கார்டனில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும், மயோன் கல்வித்திட்ட மற்றும் சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா கலந்து கொண்டார்.அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். பின்னர் கிராஅத், வரவேற்புரை,வரவேற்பு கீதம் என்பன இடம்பெற்றன.

பிரதம அதிதியால் பள்ளிவாசலுக்கு மின் குமிழ் கையளிக்கப்பட்டது.

இதன் போது நற்பிட்டிமுனை பிரதேசத்தில் உள்ள ஓய்வு நிலை சாதனையாளர்களுக்கு கௌரவமும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் கௌரவ அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனைத் தொகுதியின் அமைப்பாளரும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான சீ. எம். முபீத் மற்றும் அல் – கரீம் பவுண்டேஷனின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.





# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நிவாரணம் தொடர்பில் கலந்துரையாடல்

(எஸ்.கீதபொன்கலன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான இடைக்கால நிவாரணம் தொடர்பாக திறைசேரி செயலாளர் ஸ்ரீவர்தனவுடன் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பெருந்தோட்ட சமூகத்தினரை உள்வாங்கக் கூடிய ஏனைய நலன்புரித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.









# சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா!

(வி.ரி.சகாதேவராஜா)

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எஸ்.குணராசா தலைமையில் இடம்பெற்றது.

காரைதீவில் இடம்பெற்ற துறவற நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண நிகழ்வை தொடர்ந்து இடம்பெறும் முதலாவது நிகழ்வு இதுவாகும்.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் இந்து சமய பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், பிரதி அதிபர் எஸ்.கோகுலராஜ் திருமதி புண்ணியமலர், கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா. ஸ்ரீபிரியா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளுக்கான சுவாமியின் படங்களை சமயப்பற்றாளர் மகேந்திரன் வழங்கி வைத்தார். இதற்கான ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்க ளத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டிருந்தார்.





# கிழக்கு மாகாண எறிபந்து போட்டியில் சேனைக்குடியிருப்பு கணேசா சம்பியன்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண மட்ட ஏறிபந்து போட்டியில் கல்முனை வலயத்துக்கு உட்பட்ட சேனைக்குடியிருப்பு கணேசா மகா வித்தியாலய 20 வயது பிரிவின் பெண்கள் அணியினர் வெற்றியீட்டி கிழக்கு மாகாண சம்பியனாக வெற்றி வாகை சூடி தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



# பட்டிருப்பு கண்டுமணி மகா வித்திக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் வழங்கல்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு, பட்டிருப்பு கண்டுமணி மகா வித்தியா லயத்துக்கு மாணவர்க ளின் நன்மை கருதி மேற்கத்திய பாண்ட வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் வே. யோகேஸ் வரன் தலைமையில் நேற்று (05) இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாண்ட் வாத்திய கருவிகளைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 77 வர்த்தகர்களுக்கு அபாரம் விதிப்பு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மாதம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 77 வர்த்தகர்களுக்கு நீதி மன்றங்களால் 3 லட்சத்து 22 ஆயிரத்து 499 ரூபா அபராதம் விதிக்கப்பட் டுள்ளது. என்று பாவனையாளர் அலு வல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம் மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டிய ஆகிய நீதி மன்றங்களின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசங்களின் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புல னாய்வு உத்தியோஸ்தர்கள் மேற் கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 109 வர்த்தகர்கள் இனங்காணப்பட்டனர்.

இதில் 77 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை, காலவதியான மற்றும் தரமற்ற பொருள் களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றியமை, மின் உபகரணங்களின் கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கே இவ்வாறு நீதிமன் றங்களின் மூலமாக அபராதம் விதிக் கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# திராய்க்கேணிப் படுகொலையின் 34 ஆவது நினைவு தினம் இன்று

அம்பாறை மாவட்டத்தில் உலகறிந்த மிகவும் கொடூரமான திராய்க்கேணிப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 34 வருடங்களாகின்றன.

1990 ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 34 ஆவது வருட நினைவு தினம் இன்று (06) ஆகும்.

சுற்றிவளைப்பின்போது திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் 54 தமிழ் மக்கள் பால் வயது வித்தியாசமின்றி வெட்டியும் கொத்தியும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மனிதாபிமானம் என்றால் என்ன விலை என்று கூறுமளவுக்கு 1990 காலகட்டத்தில் வகை தொகையின்றி தமிழ் மக்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப் பட்டார்கள். இன்னும் அவற்றுக்கு நீதி கிடைக்கவில்லை என்பது அவர்களது ஆதங்கமாகும்.

இந்தச் சம்பவம் பற்றி அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கூறுகையில்,

இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின்பு திட்டமிட்டவகையில் 1956 ,1985 ,1990,2009 வரை தமிழ் மக்கள் திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வந்திருக்கின்றார்கள்.

ஆனால் இதுவரை அந்தப் படுகொலைகளுக்கு நீதியோ, நஷ்ட ஈடோ கிடைக்கவில்லை .

எந்த இனமாக இருந்தாலும் ஆலயம் என்பது புனித ஸ்தலமாக இருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் இந்து ஆலயத்தில் தான் அதிகமான படுகொலைகள் இடம் பெற்று இருக்கின்றன. அரசே ராணுவத்தையும், ஊர்காவல் படையினரையும் பயன்படுத்தி இந்த திட்டமிட்ட படுகொலையை செய்தது .

அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி மட்டும் அல்ல உடும்பன் குளத்திலே 151 விவசாயிகள் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதே போன்று சொறிக்கல்முனையில் பங்குத் தந்தை செல்வராஜா உட்பட நூற்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வீரமுனையிலும் ஆலயத்தில் வைத்து நூற்றுக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இந்த வரலாற்றை எல்லாம் நாங்கள் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்ல வேண்டும். சமகால சந்ததியினர் சுதந்திரமாக நின்மதியாக வாழ வேண்டும்.– என்றார்.

மற்றுமொரு தமிழ் பற்றாளர் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறுகையில்,

அம்பாறை மாவட்டத்திலே 58 தமிழ்கிராமங்களை இலக்கு வைத்து இன அழிப்பு நடத்தப்பட்டது. ஆலங்குளம், மீனோடைக்கட்டு போன்ற கிராமங்கள் ஒரு தமிழர்களும் இல்லாமல் முற்றாக கபளீகரம் செய்யப்







பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் இனவாதிகள் இணைந்து செய்தார்கள் என்பது மாற்றுக் கருத்துக்களுக்கு இட இல்லை.

எமது அடையாளத்தை நாங்கள் பேணவேண்டுமாக இருந்தால் அரசியல் ரீதியான தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் தொடர்ச்சியாக அமைதி வழி அறவழிப்போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அதைத்தான் எமது கட்சியும் செய்து கொண்டிருக்கிறது.– என்றார்.

படுகொலை சம்பவத்தில் கணவர்மாரை இழந்து விதவைகளானோர் 40 பேராவர்.

கண்முன்னே சம்பவத்தை பார்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இரண்டு தாய்மார்களான அன்னம்மா, மாரிமுத்து மற்றும் கிராம தலைவர் சி.கார்த்திகேசு ஆகியோர் அழுது அழுது கதை கூறினார்கள்.

இவர்களுக்கு நீதி கிடைக்குமா? நஷ்ட ஈடாவது கிடைக்குமா? என்று சர்வதேசமும் 34 வருடங்கள் காத்திருக்கிறது.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு நிருபர்.**





# மீண்டும் எழுதப்பட வேண்டிய வங்கம் தராத வரலாறு...!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா



வங்க தேசத்தின் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்த தந்தை முஜிபூர் ரஹ்மானின் சிலைக்கு நேர்ந்த நிலையை இன்று சமூக ஊடகங்களில் பார்க்க கூடியதாக உள்ளது.

சிலைக்கு நேர்ந்த நிலை

ஷேக் ஹசீனாவின் தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் தான் பங்களாதேஷ் நாட்டை உருவாக்கியவர். வங்கதேச விடுதலைக்கு காரணமான தேசத் தந்தை எனப் போற்றப்பட்டவர். ஆனால், வங்கதேசம் விடுதலையான சில ஆண்டுகளிலேயே முஜிபுர் ரஹ்மானும் அவரது குடும்பத்தினரும் சொந்த நாட்டு இராணுவத்தினராலேயே படுகொலை செய்யப்பட்டனர்.

அப்போது ஷேக் ஹசீனாவும் ரெஹானாவும் வெளிநாட்டில் இருந்ததால் உயிர் தப்பினர். தற்போது ஷேக் ஹசீனாவும் ரெஹானாவும் சொந்த நாட்டு மக்களின் புரட்சியால் நாட்டை விட்டே தப்பி ஓடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பங்களாதேஷில் இராணுவ ஆட்சி என தளபதி வாக்கர் உஸ்-ஜமான் அறிவித்துள்ளார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்த நிலையில், தலைநகரான டாக்காவை விட்டு வெளியேறியுள்ளார். இதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

பங்களாதேஷில் அனைத்து பாடசாலை, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், சமூக வலைதளங்களும் முடக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே, அந்த நாட்டில் இடைக்கால அரசை இராணுவம் அமைப்பதாக இராணுவ தளபதி வக்கார் உஸ்-ஜமான் அறிவித்துள்ளார்.

மேலும், சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்துவோம். கடினமான சூழலில் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளார். பங்களாதேஷை விட்டு வெளியேறிய ஷேக் ஹசீனாவும் அவரது சகோதரியும் இந்தியாவின் திரிபுரா மாநிலம் அகர்தலாவில் தஞ்சமடைந்திருப்பதாக அசல் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இது தொடர்பில் அந்த நாட்டு மத்திய அரசு எந்தவிதமான உத்தியோகபூர்வ தகவலையும் வெளியிடவில்லை.

பங்களாதேஷில் ஏற்பட்ட வேலையின்மை அதிகரிப்பு, இராணுவ குடும்பங்களுக்கு மாத்திரம் 90 சதவீதமான ஒதுக்கீடுகள் உள்ளிட்ட காரணமாக மாணவர்கள் மற்றும் படித்த பட்டதாரிகளால் போராட்டம் வெடித்தது.

அடிப்படை மதவாத பின்னணி

வங்கதேச சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வரும் முப்பது சதவீத இடஒதுக்கீட்டு முறைக்கு எதிராக 2024 ஜூலை இறுதியில் பெரும் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் உருவாக்கப்பட்ட கலவரத்தில் கிட்டத்தட்ட இருநூறுபேர் கொல்லப்பட்டனர்.

மாடவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீட்டு முறையில் மாற்றத்தை கொண்டு வந்தது. 93 சதவீத இடங்கள் திறமையின் அடிப் படையில் நிரப்பப்படும் எனவும் அறிவித்தது.

உச்ச நீதிமன்ற அறிவிப்பு வந்து இரு வாரங்களில் ஓகஸ்ட் நான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீண்டும் போராட் டம் வெடித்தது.

இந்த கலவரம் உண்மையில் மாணவர்களால் நடத்தப்படவில்லை. நாட்டில் உள்ள மதவாதிகளால் தூண்டிவிடப்பட்டுள்ளது. மாணவர்கள் நடத்திய

தொடர்ச்சி▼

# வங்கம் தராத வரலாறு...!



**தொடர்ச்சி▲**

நியாயமான போராட்டங்களில், தடை செய்யப்பட்ட ஜமாத்-இ-இஸ்லாமி போன்ற குழுக்களுடன் பேகம் கலிதா ஜியாவின் வங்கதேச தேசிய கட்சி (பி.என்.பி.) உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து இந்த கலவரத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்த நிலையில் வங்கதேச தொழிலாளர் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஞாயிற்றுக்கிழமையன்றே வன் முறையாளர்களுக்கு எதிராக கண்டனங்களை தெரி வித்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது வங்கதேச அரசை அந்த நாட்டு ராணுவம் பொறுப்பேற்றுள்ளதுடன், இடைக்கால அரசாக ராணுவம் செயல்படும் என்றும் புதிய அரசை அமைக்க ராணுவம் உதவும் எனவும் ராணுவத் தளபதி வாக்கர் உஸ் ஜமான் தெரிவித்துள்ளார்.

வங்கதேசம் பெருமைகளுடன் திகழும் இந்த மக்களாட்சி நாடு, தற்போது பற்றி எரிந்து வருகிறது. இயற்கையின் பெரும் வளங்களையும் வீர தீரம் மிக்க வரலாறையும் தன்னகத்தே கொண்டுள்ள தெற்காசிய நாடு.

தற்போது வங்கதேசம் வன்முறைகளால் பற்றி எரிகிறது. இந்தப் பரபரப்புக்கெல்லாம் காரணம், மாணவர் உரிமைப் போராட்டமே ஆகும். மாணவர் போராட்டத்தால் வெடித்த தாக்குதலும், இதைத் தொடர்ந்த வன்முறையுமே முக்கிய காரணமாகும்.

**வங்கப் பிரிவினையின் பின்னரான புதிய புரட்சி**

1971 இல் இனி கிழக்கு பாகிஸ்தான் அல்ல, சுதந்திர வங்கதேசம் என இன்றைய பங்களாதேஷ் விடுதலை அடைந்தது. இந்திய வரைபடத்தில் பார்த்தால், இந்தி யாவுடன் சேர்ந்தே இருக்கும் ஒரு மாநிலம் போலவே தெரியும். மேற்கு வங்கம் என்ற மாநிலத்தின் பெயரே, வங்கப் பிரிவினையின் பின்னர் பங்களாதேஷ் விடுதலை பெற்றது வரலாறு.

இந்தப் போராட்டத்தை ஆதரித்தது இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு. விடுதலைப் போருக்காக படைகளை அனுப்பியது. 1971 டிசெம்பர் 16 இல் இந்தியா மற்றும் முக்தி – பாஹினி கூட்டுப் படைகளின் முன்பு சரணடைந்தார் பாகிஸ்தான் ராணுவ ஜெனரல். இந்தப் போரின் முடிவு, வங்கதேசம் என்ற புதிய தேசம் உருவாக வழிவகுத்தது.

இந்தப் போரில் 5 லட்சம் பேர்வரை கொல்லப் பட்டிருக்கலாம் என கணக்கிடப்பட்டது. ஏராளமானோர் காணாமல் போயினர். விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தோரின் தியாகத்தைப் போற்றும் விதமாக, அவர்களின் சந்ததிகளுக்கு வேலை வாய்ப்பில் 30 வீத இடஒதுக்கீடு வழங்கியது வங்கதேசம் அரசு. பின்னர் 2018 இல் வெடித்த மாணவர்கள் புரட்சியின் காரண மாக, இந்த இட ஒதுக்கீட்டு முறை இரத்துச் செய்யப் பட்டது.

நாட்டுக்காக தியாகித்தவர்களை கௌரவிக்கும் வண்ணமே இந்த இட ஒதுக்கீடுகள் அறிமுகப் படுத் தப்பட்டன. ஆனால் இதன் விளைவாக மாண வர்களின் போராட்டங்களால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வங்கப் பிரிவினையின் பின்னரான புதிய புரட்சி போல தற்போது நிகழ்ந்துள்ளமை வரலாற்றின் புரட்சியல்ல, வெறும் பிறழ்ச்சியாகவே தென்படுகிறது. வங்க தேச தந்தை முஜிபூர் ரகுமானின் சிலைக்கு நேர்ந்த நிலையை பார்க்கையில் இந்த போராட்டங்களின் பின்னணியில் பாரிய வெளிநாட்டு சக்திகளின் கைங்கர யமோ எனவும் ஐயப்பட வேண்டியுள்ளது.









## பங்களாதேஷில் மாணவர்கள் போராட்டங்கள் தீவிரம்

## பிரதமர் பதவியை ராஜினாமா செய்த ஷேக் ஹசீனா

# இந்தியாவில் தஞ்சம்

## அனைத்துக் கட்சிகளும் கூடி ஆராய்வு

## மக்களவையில் இன்று அறிக்கை சமர்ப்பிப்பு

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

பங்களாதேஷில் மாணவர்கள் போராட்டம் பெரும் கலவரமாக வெடித்த நிலையில், தலைநகர் டாக்காவில் நாடாளுமன்றம், பிரதமர் இல்லத்துக்குள் வன்முறை கும்பல் புகுந்து சூறையாடியது. பிரதமர் பதவியை ராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, அங்கிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இதையடுத்து நாட்டின் ஆட்சிப் பொறுப்பை இராணுவம் ஏற்றுக்கொண்டுள்ளது.

1971இல் பாகிஸ்தானில் இருந்து பிரிந்து பங்களாதேஷ் தனி நாடாக உதயமானது. அப்போது பாகிஸ்தான் இராணுவத்துக்கு எதிரான போரில் உயிர்தியாகம் செய்தவர்களின் வாரிசுகளுக்கு பங்களாதேஷ் அரசு சார்பில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. பின்தங்கிய மாவட்டங்கள், பெண்கள், சிறுபான்மையினருக்கும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதன்படி பல்வேறு பிரிவினருக்கு 56% இடஒதுக்கீடும், பொது பிரிவினருக்கு 44% இட ஒதுக்கீடும் அமுலில் இருந்தது.

இந்த இடஒதுக்கீடு நடைமுறையை எதிர்த்து பங்களாதேஷ் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் கடந்த ஜூனில் போராட்டம் தொடங்கினர். இதில் சுமார் 200 பேர் உயிரிழந்தனர். 2,500க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

கலவரம் அதிகரித்த நிலையில், பிரதமர் ஷேக் ஹசீனா தனது குடும்பத்தினருடன் டாக்காவில் இருந்து இராணுவ ஹெலிகொப்டரில் புறப்பட்டு, பங்களாதேஷ் விமானப் படை தளத்துக்கு சென்றார். அங்கிருந்து சி-130 விமானம் மூலம் நாட்டைவிட்டு வெளியேறினார். பிரதமர் பதவியை ராஜினாமா செய்து விட்டு, நாட்டைவிட்டு ஷேக் ஹசீனா வெளியேறிவிட்டார் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே, பங்களாதேஷில் இருந்து ஷேக் ஹசீனா (76) மற்றும் அவரது குடும்பத்தினருடன் புறப்பட்ட விமானம், புதுடில்லி அருகே உள்ள ஹிண்டன் விமானப்படை தளத்தில் நேற்று மாலை தரையிறங்கியது. ஷேக் ஹசீனாவை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் வரவேற்றார். ஹசீனாவுடன் அவரது தங்கை ஷேக் ரெகனாவும் வந்துள்ளார்.

ஹசீனாவின் மூத்த மகன் ஷாஜிப் வாஸத் ஜாய், அமெரிக்காவின் வர்ஜினியா மாநிலம் பால்ஸ் சர்ச் பகுதியில் குடும்பத்துடன் வசிக்கிறார். இளைய மகள் சைமா வாஸத், உலக சுகாதார அமைப்பின் தென் கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் இயக்குநராக உள்ளார். அவர் தற்போது குடும்பத்துடன் புதுடில்லியில் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஷேக் ஹசீனா தஞ்சமடைந்துள்ள நிலையில், இதுகுறித்து பிரதமர் மோடியுடன் மத்திய வெளியுறவுதுறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது, பங்களாதேஷ் நிலவரம் குறித்து பிரதமரிடம் அவர் எடுத்துரைத்தார். பிரதமர் இல்லத்தில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு நேற்று இரவு கூடி ஆலோசனை நடத்தியது. இதில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் பங்கேற்று, பங்களாதேஷ் நிலவரம் குறித்து விளக்கினார்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், பங்களாதேஷ் விவகாரம் தொடர்பாக மக்களவையில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அறிக்கை தாக்கல் செய்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கமளிக்கிறார். இதனை மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்தியாவும், பங்களாதேஷும் 4,096 கி.மீ எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளன. பங்களாதேஷில் அசாதாரண சூழ்நிலை நிலவுவதால் இந்திய எல்லை பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் உள்ள பங்களாதேஷ் தூதரகத்திலும் பத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



## முதலில் நாடாளுமன்றம் கலைப்பு

## பின்னர் இடைக்கால அரசாங்கம் அமைப்பு

### பங்களாதேஷ் நிலவரம் குறித்து பிரதமர் தலைமையில் கூடி ஆராய்ந்து

# தீர்மானம்!

கலவர பூமியாகக் காட்சியளித்துள்ள பங்களாதேஷில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படவுள்ளது.

பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்ததையடுத்து நேற்று மதியம் தனது பதவியை ராஜிநாமாச் செய்து நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

இந்நிலையில், பங்களாதேஷில் அரசியல் நகர்வுகள் நடந்து வருகின்றன. பங்களாதேஷ் அதிபர் முகமது ஷஹாபுதீன், டாக்காவில் வைத்துப் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் முப்படைகளின் தலைவர்களுடன் ஒரு சந்திப்பை இன்று நடத்தினார். இக்கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன.


இந்த முடிவுகள் குறித்து கூட்டத்தில் பேசிய அதிபர் முகமது ஷஹாபுதீன்,

“தற்போது இருக்கும் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, அதன்பின்னர் பங்களாதேஷில் இடைக்கால அரசு அமைக்கப்படும். மேலும் தற்போது நாட்டில் நிலவும் கலவர சூழலை முடிவுக்குக் கொண்டுவர இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல், பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவை வீட்டுக் காவலிலிருந்து விடுவிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அனைத்து மாணவர்களையும் விடுவிக்க உள்ளோம். இராணுவத் தளபதி வகர்-உஸ்-ஜமான், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரதிநிதிகளை விரைவில் சந்திப்பார்.

அனைத்து அரச அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள், தொழிற்சாலைகள், பள்ளிகள், கல்லூரிகள், மதரஸாக்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என அனைத்து கல்வி நிறுவனங்களும் இன்று திறக்கப்படும்” என்று கூறினார்.

இடைக்கால அரசை அமைப்பதற்கு முன்பாக, நாடாளுமன்றத்தைக் கலைப்பதன் மூலம் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்பு உருவாகும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.



கனடா முரசு
பக்கங்கள் - 6
செவ்வாய்க்கிழமை 06/08/2024

## பாலியல் குற்றச்சாட்டில் தேடப்படும் சந்தேகநபர்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 06
டொரன்டோவில் தகாத செயற்பாட்டில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

C2



# மத்திய கிழக்கில் பதற்றத்தைத் தணிக்க கனடா உட்பட ஜி 7 நாடுகள் அழைப்பு!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 06
கனடாவும், ஜி7 நாட்டுத் தலைவர்களும் மத்திய கிழக்கில் பதற்றத்தை தணிக்க அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் பிரதிநிதியுடன் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

C2



# கனடாவின் குடிவரவு கொள்கையில் முக்கிய மாற்றம் வருவதாகத் தகவல்



கனடா அதன் குடிவரவு கொள்கையில் முக்கிய மாற்றத்தை கொண்டு வரவுள்ளது.

இதன்மூலம் semi skilled workers எனப்படும் நான்காம் மற்றும் ஐந்தாம் நிலை பணியாளர்களுக்கு நிரந்தர குடியுரிமை எளிதில் கிடைக்கும் என கூறப்படுகிறது.

கனடா குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சகம் (IRCC) குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு சட்டத்தில் (IRPA) மாற்றம் செய்வதற்கான திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்த மாற்றம், பயிற்சி, கல்வி, அனுபவம் மற்றும் பொறுப்புகள் (TEER) நிலைகள் 4 மற்றும் 5 இல் அனுபவம் மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்களுக்கான புதிய நிரந்தர

C2



# ஜாஸ்பர் காட்டுத்தீயின் பாதிப்பை நேரில் பார்த்தார் பிரதமர் ட்ரூடோ

**அல்பேர்ட்டா, ஒகஸ்ட்06**

அல்பேர்ட்டாவின் ஹிண்டனுக்கு விஜயம் செய்த பிரதர் ஜஸ்டின் ட்ரூடோ, ஜாஸ்பர் காட்டுத்தீயின் நிலை குறித்த விளக்கத்தை நேரில் பெற்றார்.மேலும் நகரத்தின் மூன்றில் ஒரு பகுதியை அழித்த தீயில் இருந்து தப்பிப்பிழைத்த மாகாண முதல்வர் மற்றும் பாதிக்கப் பட்டவர்களைச் சந்தித்தார்.

ஹிண்டனில் உள்ள நடமாடும் கட்டளை மையத்தை சுற்றிப்பார்த்த பிரதமர், ஜெஸ்பர் நகரத்தையே சுற்றிப் பார்ப்பார் என எதிர்பாரக்கப்பட்டிருக்க வில்லை.

கட்டளை மையத்திற்குள் நுழைந்த பிரதமர், மாகாண முதல்வர் டானியல் ஸ்மித் மற்றும் மாகாணத்தின் பொது பாதுகாப்பு அமைச்சர் மைக் எல்லிஸ் ஆகியோரை சந்தித்து, மேலும் காட்டுத் தீயைக் கையாளும் அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்களுடன் நிலைவரம் தொடர்பில் கலந்துரை யாடினார்.

மீட்புப் பணியில் உயிரிழந்த தீயணைப்பு வீரருக்கு மரியாதை செலுத் தும் ஒரு நிமிட மௌன அஞ்சலியிலும் அவர் பங்கேற்றார்.

---

### கனடாவின் குடிவரவு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார குடிவரவு வகுப்பை உருவாக் கும் நோக்கத்தில் உள்ளது.

இந்தப் புதிய மாற்றம், பரந்த அளவி லான திறன்கள் மற்றும் அனுபவம் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு நிரந் தர குடியுரிமையை (Permanent Resi dency) எளிதில் வழங்கும். இதன் மூலம் பொருளாதார குடிவரவு முறைமையை (economic immigration system) நவீனமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**கனடாவின் TEER முறை என்பது என்ன?**

TEER (Training, Education, Experience, and Responsibilities) முறை, தேசிய தொழில் வகைப்படுத் தல் (NOC) முறையின் புதுப்பிப்பாக 2022ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இது வேலைகளை பழைய 'திறன் நிலைகளுக்கு' பதிலாக, TEERS என்று அழைக்கப்படும் பல்வேறு வகைகளில் வகைப்படுத்துகிறது.

வுநுநுசுள 0-3 என்பது பொதுவாக இரண்டாம் நிலைக் கல்வி அல்லது குறிப் பிட்ட நீளம் கொண்ட பயிற்சி தேவைப் படும் வேலைகளுக்கானது.

வுநுநுசுளு 4 மற்றும் 5 ஆகியவை உயர்நிலைப் பள்ளிக் கல்வி, வேலையில் பயிற்சி மட்டுமே தேவைப்படும் வேலை களுக்கானது.

TEER 5 இல், எவ்வித முறையான கல்வியும் இல்லாமல், குறுகிய கால பயிற்சி மட்டுமே தேவைப்படும் வேலை களுக்கானது.

இந்த மாற்றங்கள் TEER 4 மற்றும் 5 வேலைகளில் கனேடிய வேலை அனுபவம் பெற்ற வெளிநாட்டு நபர்கள் எளிதாக நிரந்தர குடியுரிமையை பெறு வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்.

இது இவ்வகையான பணியாளர்கள் கனேடிய பொருளாதாரத்தில் தொடர்ந்து பங்களிக்கவும், இவ்வகைத் துறைகளில் தொழில்சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்யவும் உதவும்.

---

### மத்திய கிழக்கில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிக்கையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை தொடர்பில் ஆழ்ந்த கவலை வெளியிடப்பட்டுள்ள துடன், இது பிராந்தியத்தில் ஒரு பரந்த மோதலைத் தூண்டும் அச்சுறுத்த லைக் கொண்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் மோதல் நிலை மேலும் தீவிரமடைவதால் எந்த நாடும் அல்லது தேசமும் ஆதாயமடையாது எனவும், பழிவாங்கும் வன்முறையை தவிர்க்குமாறு அனைத்து தரப்பின ரையும் வலியுறுத்துவதாகவும் அந்த அறிக் கையில் அமைந்துள்ளது.

ஈரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மா யில் ஹனியே படுகொலை செய்யப்பட்ட பின்னர், மத்திய கிழக்கில் ஒரு முழு மையான பிராந்திய யுத்தம் ஏற்படும் என்ற அச்சம் அதிகரித்து வருகிறது.

புதனன்று நடந்த தாக்குதலுக்கு உடனடியாக யாரும் பொறுப்பேற்க வில்லை, ஆனால் காசாவில் போரைத் தூண்டிய இஸ்ரேல் மீதான குழுவின் அக்டோபர் 7 தாக்குதலுக்கு ஹனியே மற்றும் பிற ஹமாஸ் தலைவர்களைக் கொல்ல சபதம் செய்த இஸ்ரேல் மீது சந்தேகம் வெளியாகியுள்ளது.

---

### பாலியல் குற்றச்சாட்டில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாலியல் குற்றச் செயலில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

டென்போர்த் எவனியூ மற்றும் டொனால்ட்ஸ் எவனியூ ஆகியன வற்றுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரயிலில் பயணம் செய்த போது போது இந்த நபர் சக பயணியை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்டவரும், பாலியல் குற்றச் செயலில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட நபரும் ஒரே ரயில் நிலையத்தில் இறங் கினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் ரயில் நிலை யத்தில் இறங்கித் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்தேக நபர் பற்றிய பட மொன்றை பொலிஸார் வெளியிட்டுள் ளனர்.

சந்தேக நபர் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு கோரப்பட் டுள்ளது.












# பாக். உளவு அமைப்பைச் சேர்ந்தவர் மீது கனடாவில் தீவைத்துக் கொளுத்திய நபர்

கனடாவில், பாகிஸ்தான் உளவு ஏஜன்சியைச் சேர்ந்த ஒருவர் எனக் கருதப்படும் நபர் மீது தீவைத்துவிட்டு தப்பிச் சென்றுவிட்டார் மர்ம நபர் ஒருவர்.

பாகிஸ்தான் உளவு அமைப்பான Inter-Services Intelligence (ISI) ஏஜண்ட் சுயாயவ சுயழ. அவர் கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியவின் சர்ரேயில் பணப்பரிமாற்ற அலுவலகம் நடத்தி வந்துள்ளார்.

சுயாயவ சுயழவின் அலுவலகத்துக்கு சுமார் 24 அல்லது 25 வயது மதிக்கத் தக்க ஓர் இளைஞர் பணப்பரிமாற்றத்துக்காக வந்துள்ளார். ஆனால், எதிர்பாராத நேரத்தில் திடீரென Rahat Rao மீது தீவைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார் அந்த மர்ம நபர்.




படுகாயமடைந்த Rahat Rao வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

தாக்குதல் நடத்தியவர் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட வெள்ளை நிற மினி கூப்பர் வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த Rahat RaoI, 2023ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட காலிஸ்தான் பிரிவினைவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொலக்கு எதிரான போராட்டங்களைத் தூண்டிவிட்டு, முன்னின்று நடத்தினார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் கனேடிய பொலிஸார் விசாரணைக் குட்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒருவரைச் சுட்டுக் கொன்று தானும் சுட்டுத் தற்கொலை

## ஸ்டார்ட்போர்ட்டில் சம்பவம்



**ஒன்ராரியோ, ஒகஸ்ட்06**

ஒன்ராரியோவின் ஸ்டார்ட்போர்ட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் 36 வயதான ஜொனதன் பெனாட் என்பவர் கொல்லப்பட்டார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பிலான புதிய விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலை 31 வயதான ரிக்கி பில்கே என்பவர் மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் மேலும் இரண்டு பேர் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபரும் துப்பாக்கியால் தனக்கு தானே சிட்டுக் கொண்டு உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# மருத்துவர்கள், செவிலியர்களைப் பணிக்கமர்த்த பெரிதும் அல்லாடுகின்ற சிறிய சமூகப் பிரிவுகள்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 6**

ஒன்ராரியோ முழுவதும் உள்ள சிறிய சமூகங்கள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு போராடி வருகின்றன.

ஒன்ராரியோவின் ஹன்ட்ஸ் வில்லியில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் நகரத்தில் பணிபுரிய ஒப்புக் கொள்ளும் எந்தவொரு குடும்ப மருத்துவருக்கும் 80,000 டொலர்கள் கையொப்பமிட்ட போனஸ் வழங்குவதாக உள்ளூர் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கிழக்கு ஒன்ராரியோவில் உள்ள ஒரு நகராட்சியான கிர்க்லாண்ட் ஏரியில் உள்ள பிளான்ச் ரிவர் ஹெல்த், உலகில் எங்கும் உள்ள எவருக்கும் 2,000 டொலர் ஊக்கத்தொகை வழங்குகிறது.

அவர்கள் மருத்துவமனையில் பணி புரிய மருத்துவர் அல்லது செவிலியரை வெற்றிகரமாகப் பரிந்துரைக்கின்றனர்.

டொராண்டோவில் இருந்து வடமேற்கே 1,700 கிலோமீட்டர் தொலைவில் உள்ள டிரைடனில், ஒரு தனிமைப்படுத்தப்பட்ட நகரத்தில், பிராந்திய சுகாதார மையத்தின் நீண்டகால மருத்துவர் போனஸ் திட்டத்தில் தற்போது 37,500 டொலர்கள் இடமாற்றச் செலவுகளுக்கு உதவியாக உள்ளது.



# இளவயதில் விமானமோட்டிய 14 வயதுச் சிறுமியின் சாதனை

**ஒன்ராரியோ, ஓகஸ்ட்06**

இளவயதில் விமானமோட்டியவர் என்கிற சாதனையை 14 வயதான அனாயா சொஹைல் என்ற சிறுமி நிறைவேற்றியுள்ளார்.

விமானம் ஒன்றை தனி நபராக கனடா பெருநகரப் பகுதியில் செலுத்தி அவர் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

வானத்தில் எப்போது விமானத்தைப் பார்த்தாலும், அதனைச் செலுத்த வேண்டும் என சிறுவயது முதலே தாம் கனவு கண்டு வந்ததார் என அனாயா தெரிவித்துள்ளார்.

ஆலோசகருடன் பல தடவைகள் விமானத்தைச் செலுத்தியிருந்த போதிலும் முதன்முறையாக தனியாக விமானத்தை செலுத்தியமை ஆர்வம் மிகுந்ததாக இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



# மான் வேட்டையாடிய இருவருக்கு பத்தாயிரம் டொலர் வரை அபராதம்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட்06**

ஒன்ராரியோவில் மான் வேட்டையாடிய இரண்டு பேருக்கு பெருந்தொகை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் தவறுதலாக காளை கடமான் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மான் வேட்டையாடுவதற்கு இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் காளை கடமானை வேட்டையாட அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தன்டர்பே பகுதியைச் சேர்ந்த ஜோன் பொலிசோக் என்பவருக்கும், ஜொஸ்வா ஸ்டீவன்சன் என்பவருக்கும் இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வேட்டையாடிய மற்றும் சட்டவிரோதமான முறையில் வேட்டையாடிய விலங்கினை வைத்திருத்தல் ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த இருவருக்கும் சுமார் பத்தாயிரம் டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.




# மொன்றியல் மேற்கில் சரமாரியாகச் சூடுகள்

**கியூபெக், ஒகஸ்ட் 06**

மொன்றியல் மேற்கு பகுதியில் நிகழ்ந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

சந்தேக நபர் ஒருவருக்கும், பொலிஸாருக்கும் இடையே துப்பாக்கிச் சூட்டுப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை இரவு நிகழ்ந்த இந்தச் சம்பவத்தில் 30 முதல் 40 துப்பாக்கிச் சூடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# சிம் அட்டைகளுக்குள் ஊடறுத்து வங்கிக் கணக்குகளில் கையாடல்

## 10 பேர் கைது; இருவர் தேடப்படுகின்றனர்

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 06**

டொரன்டோவில் சிம் அட்டைகளை கொண்டு மோசடி செய்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவரின் சிம் அட்டைக்குள் ஊடறுத்து மோசடிகள் செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு நபர்களின் அலைபேசிகளுக்குள் ஊடக வங்கி கணக்குகளில் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த நபர்களுக்கு எதிராக 108 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சிலர் ஐயாயிரம் டொலர்களுக்கு மேற்பட்ட மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர் எனர் தெரிவிக்கப்படுகின்றது.

ஆள்மாறட்டம் செய்து சிம் அட்டைகளின் முக்கியமான தகவல்களை பெற்றுக்கொண்டு இந்த மோசடி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பத்து பேர் கைது செய்யப்பட்ட போதிலும் மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.